100 நாள் வேலை ரத்து – விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் – நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்த,

ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



100 நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பாஜக அரசையும் – அதற்கு ஒத்து ஊதும் அடிமை அதிமுக வையும் கண்டித்து திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநகரம், ஒன்றியம், நகரம் மற்றும் பேரூர் கழகங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை வருகிற 12.02.2026 (வியாழக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள பூவிருந்தவல்லி கிழக்கு, பூவிருந்தவல்லி மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் வடக்கு, எல்லாபுரம் மத்தியம், திருமழிசை பேரூர், பூவிருந்தவல்லி நகரம், திருநின்றவூர் நகரம், திருவேற்காடு நகரம், ஆவடி மாநகரம் உள்ளிட்ட கழக நிர்வாகங்களில் வருகிற (12.02.2026 - வியாழன்கிழமை) காலை 10.30 மணியளவில், கீழ்க்கண்ட அட்டவணைப்படி ஒன்றிய பா.ஜ.க. அரசையும். அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| கழக நிர்வாகம் | தலைமை | கண்டன உரை | முன்னிலை | இடம் |
|---|---|---|---|---|
| திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | R.ஜெயசீலன் | பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி | மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் த.குமரேசன் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் சா.சௌந்தரராஜன் | காக்களூர் |
| பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | D.தேசிங்கு | மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜி | பொதுக்குழு உறுப்பினர் எம்.முத்தமிழ் செல்வன் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் துர்கா பிரசாத் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கு.தமிழ்ச்செல்வி | நெமிலிச்சேரி |
| திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | சே.பிரேம் ஆனந்த் | தலைமை செயற்குழு உறுப்பினர் K.J.ரமேஷ் | பொதுக்குழு உறுப்பினர் J.மகாதேவன் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஆர்.ஆதிகேசவன் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ப.குமரேசன் | செவ்வாப்பேட்டை |
| எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | தங்கம் முரளி | மாவட்ட துணைச் செயலாளர்.எஸ். காயத்திரி ஸ்ரீதரன் | மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் ஐ.பசீர் அகமது அலிகான் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வி.பார்த்திபன் | தாமரைப்பாக்கம் |

| கழக நிர்வாகம் | தலைமை | கண்டன உரை | முன்னிலை | இடம் |
|---|---|---|---|---|
| திருநின்றவூர் நகரம் | தி.வை. இரவி | மாவட்ட துணை செயலாளர் V.J.சீனிவாசன் | பொதுக்குழு உறுப்பினர் V.குமார் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தியாகராஜன் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பிரவீன்குமார் திருநின்றவூர் நகர மன்ற தலைவர் உஷா ராணி ரவி திருநின்றவூர் நகர மன்ற துணை தலைவர் சரளா நாகராஜ் | திருநின்றவூர் பஜார் |
| பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | ப.ச.கமலேஷ் | மாவட்ட துணை செயலாளர் S.ஜெயபாலன் | பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர் மாவட்ட விவசாய தொ. அணி அமைப்பாளர் எம்.இளையான் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் என்.சண்முகம் | காட்டுப் பாக்கம் |
| திருமழிசை பேரூர் | முனுசாமி | மாநில சிறுபான்மை அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு | மாவட்ட கலை இலக்கிய அணி அமைப்பாளர் A.G.ரவி மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் மோகன் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் நிஜலிங்கம் பேரூர் மன்ற துணை தலைவர் அனிதா சங்கர் | திருமழிசை |

| கழக நிர்வாகம் | தலைமை | கண்டன உரை | முன்னிலை | இடம் |
|---|---|---|---|---|
| திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | முரளி கிருஷ்ணன் | மாவட்ட பொருளாளர் திரு.பா. நரேஷ் குமார் | பொதுக்குழு உறுப்பினர் கு.விமல் வர்ஷன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சங்கீதா சீனிவாசன் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் ஜி.ராஜேஷ்குமார் | வெள்ளியூர் |
| ஆவடி மாநகரம் | ஆவடி மாநகர பொறுப் பாளர் சண் பிரகாஷ் | G.உதயகுமார் ஆவடி மேயர் G.ராஜேந்திரன் ஆ.தெ.ப.செ. பேபி சேகர் ஆ.கி.ப.செ. பொன் விஜயன் ஆ.மே.ப.செ. நாராயண பிரசாத் ஆ.வ.ப.செ. | மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபிசேகர் அம்மு பொன் விஜயன் ஜோதிலட்சுமி நாராயண பிரசாத் | ஆவடி |
| திருவேற்காடு நகரம் | NEK மூர்த்தி | பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ் | பொதுக்குழு உறுப்பினர் S.காஞ்சனா சுதாகர் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் A.J.பவுல் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் மாவட்ட சுற்றுச்சுழல் அணி அமைப்பாளர் ஐ.ஜாக்கப் | திருவேற்காடு |

| கழக நிர்வாகம் | தலைமை | கண்டன உரை | முன்னிலை | இடம் |
|---|---|---|---|---|
| பூவிருந்தவல்லி நகரம் | G.R.திருமலை | மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் K.சுரேஷ்குமார் | மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் நாகூர்கனி மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் எ.விமல்ஆனந்த் மாவட்ட சிறுபான்மையினர் நல அணி அமைப்பாளர் க.ஷாஜகான் பூவிருந்தவல்லி நகர மன்ற துணை தலைவர் ஸ்ரீதர் | பூவிருந்தவல்லி |

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அந்நிர்வாகங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு அவர்களுடன் இணைந்து நடத்திட வேண்டும்.

நமது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.





கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, எம்.எஸ்.நகர் திட்டப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 41.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆறு தளங்கள், மூன்று பிளாக்குகள், 240 வீடுகளைக் கொண்ட புதிய அடுக்குமாடிக் குடியிருப்பினைக் காணொலி வாயிலாகத் திறந்துவைத்ததைத் தொடர்ந்து, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், பயனாளி ஒருவரின் வீட்டில் குத்துவிளக்கு ஏற்றி வைத்தார். மேலும், அத்திட்டப் பகுதியில் குடியிருப்புகளைப் பெற்றுள்ள 240 பயனாளிகளுக்கும் இனிப்புகள் விநியோகித்து, நலத்திட்ட உதவிகளும் வழங்கினார்.

கழகத் தலைவர் 73–வது பிறந்தநாளையொட்டி

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அனைத்து வார்டு -கிளைகளிலும் விழா!

## மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவு! அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, பிப்.8-

முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் 73-வது பிறந்தநாளை யொட்டி அனைத்து வார்டு - கிளைகளிலும் கழக கொடி யேற்றி கோலாகலமாக கொண்டாடபட உள்ளது என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் அருகில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணா நிதி, எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவ நாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், எல்.இதயவர்மன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பிரபு கஜேந்திரன், ரஃபி அகம்மது, பரிதி இளம்சுருதி, எஸ்.எம்.கே.அண்ணாதுரை, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆதிமாறன், க.அன்புச்செல்வன், ஜி.சி.அன்புச்செழியன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயகுமார், டி.காமராஜ், பெருங்களத்தூர் சேகர், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஜி.கே.ரவி, எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் கிருத்திகா தேவி, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்பிராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், சே.அருள்தேவி, ஜிஜேந்திரன் ராமு உள்ளிட்ட கழக நிர்வாகி கள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள்:-



தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில், திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி - இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் எண்ணிலடங்கா திட்டங்களை நிறைவேற்றி இந்தியாவின் No.1 முதல்வர் என்ற வரலாற்றுச் சாதனையை படைத்த - நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்களின் 73-வது பிறந்த நாளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் பட்டி - தொட்டியெங்கும் மிகவும் எழுச்சியுடன் கோலாகலமாக கொண்டாடுவது என்றும்,

அவரது பிறந்த நாளான 1.3.2026 அன்று காலை 9.00 மணிக்கெல்லாம், காஞ்சி வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றியம் - பகுதி - நகர - பேரூர்களில் உள்ள அனைத்து கிளைக் கழகங்களிலும், கழக கொடி தோரணங்கள்கட்டி, ஒலிபெருக்கி அமைத்து கழகக் கொடி தோரணங்களை அழகுற கட்டி, ஒலிபெருக்கி அமைத்து, கழக கொடியேற்றி, இனிப்புகளை வழங்கிடுவது என்றும், நம்முடைய மாவட்டத்தில் உள்ள 40-க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர்களுக்கு அன்று மதிய உணவு - உடைகளை வழங்கிடுவது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக முடிவெடுக்கிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்:

# கழக இலக்கிய அணிக் கூட்டம்!

## அணி செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழகத் தலைவர் - முதல்வர் தளபதி அவர்கள் பிறந்தநாள் விழாவை ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் கொண்டாடுவது தொடர்பாகவும், வருகின்ற மார்ச் மாதம் திருச்சியில் நடைபெற இருக்கின்ற கழக மாநாட்டில் இலக்கிய அணியின் பங்கு பற்றியும், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் இலக்கிய அணியின் பணிகள் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்தும் கலந்து ஆலோசிப்பதற்காக அவசர அவசிய ஆலோசனைக் கூட்டம் வருகின்ற 15.02.2026 அன்று மாலை 3.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. அதில் அவசியம் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்ய வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
இலக்கிய அணி தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை கு. சுல்தான் மொய்தீன்

பிப்ரவரி 8 (2009)



தி.மு.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக நான்கு முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

மூன்று முறை தஞ்சை நகர்மன்ற உறுப்பினராகவும், மூன்று முறை நகரமன்றத் துணைத் தலைவராகவும் தொடர்ந்து தூய பணியாற்றியதன் பலனாக 2001ஆம் ஆண்டு நகர் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சை மக்கள் போற்றும் வண்ணம் பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் இவரது மனிதநேயமிக்க தொண்டினைப் பாராட்டி முதல்வர் கலைஞர் அவர்கள் “கோட்டை அமீர்” விருது வழங்கினார்.

தலைமைக் கழகம் சார்பில் 2004ஆம் ஆண்டு “கலைஞர் விருது” தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 118 வது வட்டத்தில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு வழிகாட்டுதல்படி, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன் பொதுமக்களிடையே குறைகளைக் கேட்டறிந்து அதனை தீர்வு காணுவதற்கு உறுதி அளித்தார். நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ், அரசு அனைத்து அதிகாரிகள், வட்டச் செயலாளர் கோ.யுவராஜ், ம.ஜெயக்குமார், ப..வினோத்குமார், ஏ.வி.ராமநாதன், சாந்தி பரந்தாமன், ஜெ.மதுராய், எஸ்.ரமேஷ், எம்.காசி, கி.தியாகராஜன், மா.வேலுமணி, பே.திருத்தணி, எஸ்.சேகர், டி.பிரபா, இ.கன்னியப்பன், ஆர்.வி.சௌந்தர், கே.பி.ஜெயராமன், கே.செல்வம், கோதா, கா.சங்கீதா, சம்பத்குமார், கார்த்திக், ஆடல் அரசு, சரவணன், ஏ.செந்தில், தனலட்சுமி, ராணி, அனந்த கிருஷ்ணன், ஜீவகன், சிவா, அன்பு ராஜ்குமார் மற்றும் பாக உறுப்பினர்கள், மகளிர்கள் திரளாக கலந்து கொண்டனர்.